இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 13 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 06 – ஞாயிற்றுக்கிழமை 23 ஆகஸ்ட் 2026 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 13 : Thiruvalluvar Year - 2057 - Aavani 06 - Sunday 23 August 2026 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

### நீக்கப்பட்ட பகுதிகள் ‘ரீல்ஸ்’களாகப் பரவுகிறது ! ஆதாரமின்றிப் பேசும் அமைச்சர்கள் ! முதல்வர் மேஜையில் இருக்கும்

# கோப்புகளை ஜோதிடர் சொன்னால்தான் திறப்பீர்களா?

## சட்டப்பேரவையில் - எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சரமாரிக் கேள்விகள்!

**சென்னை, ஆக.23 -**

**“சட்டப்பேரவையில் நீக்கப்பட்ட பகுதிகள் ரீல்ஸ்களாகப் பரவுகிறது, ஆதாரமின்றி அமைச்சர்கள், உறுப்பினர்கள் பேசுகின்றனர்” என்றும் “முதல்வர் மேஜையில் இருக்கும் கோப்புகளை ஜோதிடர் சொன்னால்தான் திறப்பீர்களா? இந்த உருட்டல் மிரட்டல்களுக்கு தி.மு.க. ஒருபோதும் அஞ்சாது” என்றும் சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு முக்கியமான விஷயத்தை உங்களிடம் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கனவே, எங்கள் மூத்த சட்டமன்ற உறுப்பினர், உங்களின் கவனத்துக்கு எடுத்து வந்துள்ளார்கள். மீண்டும் அதை நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

இந்த அவையை நீங்கள் உங்களால் முடிந்தவரைக்கும் நல்லமுறையில் வழிநடத்திச் சென்று கொண்டிருக்கிறீர்கள். எங்களுக்கும் கேள்வி கேட்பதற்கான வாய்ப்பையும் கொடுக்கிறீர்கள். எங்களை விட அதிகமாக ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் வாய்ப்பு கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

**வரலாற்றில் முதல்முறையாக**

நான் இங்கே குறிப்பிட விரும்புவதெல்லாம், ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் எங்களுக்குப் பதில் சொல்லும் போது, ஆதாரம் இல்லாமல், பல குற்றச்சாட்டுகளை வைக்கிறார்கள். அவற்றையெல்லாம் நீங்கள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கி விடுகிறீர்கள்.

இன்னும் சொல்லப்போனால், சட்டமன்ற வரலாற்றிலேயே முதன் முறையாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதைவிட, ஆளுங்கட்சி உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் பேசுவதையெல்லாம் நீங்கள்தான் அவைக் குறிப்பில் இருந்து நிறைய எடுத்திருக்கிறீர்கள். அந்த வரலாற்றை நீங்கள் படைத்திருக்கிறீர்கள். அதற்கு எங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்போது இந்த அவை நிகழ்ச்சிகள் எல்லாம் நேரலையில் சென்றுகொண்டு இருக்கின்றன. நாங்கள் கேள்விகள் கேட்டால், நாங்களே அதிசயப்படுகின்ற அளவுக்குப் பதில்களையும் கொடுக்கிறார்கள். கேள்வியைக் கேட்டால் பதில் சொல்லலாம். இப்போது பாடல்கள் எல்லாம் பாட ஆரம்பித்து விட்டீர்கள்.

**அவைக்குறிப்பில் நீக்கம்**

நீங்கள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடுகிறீர்கள். ஆனால் நேரலையில் போகும்போது யுடியூப் சேனல்களிலும், சோசியல் மீடியாவிலும் இவற்றையெல்லாம் ரீல்ஸ்களாக கட் செய்யப்பட்டு, அதிகமாக ஷேர் செய்யப்படுகின்றன. அதன்பிறகு, இவற்றை நீங்கள் நீக்குவதில் அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

எனவே, மீண்டும் இதை உங்கள் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறேன். அதேபோல் இன்னொரு விஷயம்.

20.08.2026 அன்று இந்த பேரவையில் பேசிய நம் முதலமைச்சர் அவர்கள், தன் டேபிளில் மூன்று கோப்புகள் (பைல்ஸ்) இருப்பதாகவும், அந்த கோப்புகளை என்னைத் திறந்து பார்க்க வைத்துவிடாதீர்கள் என்று அவர் எங்கள் அரசைக் குற்றம் சாட்டுகின்ற வகையில் குறிப்பிட்டு பேசியிருக்கிறார்.



நாங்கள் கேட்டுக்கொள்வது, தயவு செய்து அதை அவர் திறந்து பார்க்க வேண்டும், அதன் மீது அவர் ஆக்சன் எடுக்கவேண்டும். எதற்காக பயப்படுகிறீர்கள், எதற்காகக் காலம் கடத்துகிறீர்கள்? இதையே மூன்று மாதமாக சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். ஜோசியக்காரர் சொன்னால்தான், அதைத் திறந்து பார்ப்பீர்களா? நல்ல நேரம் ஏதாவது பார்த்துக் கொண்டு இருக்கிறீர்களா?

**நேரலை என்பது, தி.மு.க ஆட்சியில்தான்!**

ஜோசியக்காரரை நியமித்துவிட்டு நீக்கியிருக்கிறீர்கள். ஜோசியக்காரர் என்பது ஒரு தவறான வார்த்தை கிடையாது.

நேரலை என்பது தி.மு.க ஆட்சியில்தான் முதன்முறையாக ஒளிபரப்பப்பட்டது. கேள்வி நேரத்தை முழுவதுமாக ஒளிபரப்பு செய்தோம். ஆனால், நீங்கள் கேள்வி நேரத்தையே எடுக்க முடியாத நிலைமையில்தான் இந்த அரசு நடந்துகொண்டு இருக்கிறது.

நாங்கள் நேரலை செய்யவில்லை என்று சொன்னார்கள். சட்டமன்ற வரலாற்றில் முதன்முறையாக நேரலை செய்தது திராவிட மாடல் அரசின் எங்கள் தலைவர் அவர்கள்தான். ஒவ்வொரு நாளும் 1.30 மணி நேரம் கேள்வி நேரம். 10 கேள்விகள் எடுக்கப்பட்டு, அப்போது இருந்த எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குப் பேச வாய்ப்பு கொடுத்தது எங்கள் தலைவர்.

**பிரச்சினைகள் வருகின்றன!**

இப்போது எல்லா நிகழ்ச்சிகளையும் நீங்கள் நேரலை செய்கிறீர்கள். இந்த பிரச்சினையைத்தான் உங்களுக்குச் சொல்கிறேன். நேரலை செய்வதால் என்னென்ன பிரச்சினைகள் வருகின்றன என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். அவைக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன் என்று சொல்லி நீங்கள் நீக்கிக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால், அது ரீல்ஸ்களாக கட் செய்யப்பட்டு பகிரப்படுகின்றன.

அதன் பிறகு முதலமைச்சர் சொன்னதுதான். மூன்று கோப்புகள் (பைல்ஸ்) இருக்கின்றன என்று சொன்னார். நான் ஓப்பன் சேலஞ்ச் செய்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அந்த கோப்புகளைப் பார்க்கட்டும். உண்மையான குற்றச்சாட்டு ஆதாரத்துடன் இருந்தால், அவர் நடவடிக்கை எடுக்கட்டும். எனவே, சினிமாவில் பேசுவது போலெல்லாம், சட்டமன்றத்தில் பேசினால் சரிவராது.

பேரவைத் தலைவர் வாயிலாக நாங்கள் கேட்டுக்கொள்வது. தயவு செய்து அந்த கோப்புகளை (பைல்ஸ்) யெல்லாம் சீக்கிரம் பிரித்துப் பாருங்கள். ஏதாவது, குற்றச்சாட்டு இருந்தால், அதற்கு ஆதாரம் இருந்தால், அது யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். இந்த உருட்டல், மிரட்டலுக்கு எல்லாம், திராவிட முன்னேற்றக் கழகம் பயப்படுவதற்கான தேவை கிடையாது.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் எங்கள் சார்பாகப் பேசிக் கொண்டு இருக்கிறேன். நீங்கள் நீக்கி விட்டீர்கள். ஆனால், இதெல்லாம் இப்போது நேரலையில் போய்விட்டது. இப்போது அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள். ‘லைவ்’ கொடுப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை, பாராட்டுகிறோம். ஆனால், அதில் இருக்கின்ற பிரச்சினைகளைச் சொல்கிறேன். நீங்கள் அவைக்குறிப்பில் இருந்து நீக்குகிறேன், நீக்குகிறேன் என்று சொல்கிறீர்கள். நீங்கள் எவ்வளவு நீக்கினாலும், அது சோசியல் மீடியாவில் வைரலாக போய்க்கொண்டு இருக்கிறது.

பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையைப் பற்றித் தெளிவாக புள்ளிவிவரங்களுடன் பேசிக் கொண்டு இருந்தார். தவறான வார்த்தைகளை முதலில் பேசியது யார் என்று உங்களுக்குத் தெரியும். அவற்றையெல்லாம் நீங்கள் அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

## ஆதாரம் இருந்தால் நடவடிக்கை எடுங்கள் !
## உருட்டல் மிரட்டல்களுக்கு தி.மு.க. ஒருபோதும் அஞ்சாது !

---

### தென்மண்டல முதலமைச்சர்கள் மாநாட்டில்

## மேகதாது அணை குறித்து வாய் திறக்காத முதலமைச்சர் விஜய்!

### விவசாயிகள் கொந்தளிப்பு!

சென்னை, ஆக. 23 -

கோவளத்தில் நடைபெற்ற தென்மண்டல முதலமைச்சர்கள் மாநாட்டில் மேகதாது அணை குறித்து முதலமைச்சர் விஜய் வாய் திறக்காதது, விவசாயிகளிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

மாமல்லபுரத்தை அடுத்த கோவளத்தில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில், தென்மண்டல முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நடைபெற்ற மாநாட்டில், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டில் காவிரி பிரச்சினை குறித்தும், மேகதாது அணை கட்டுவது குறித்தும் கர்நாடக முதலமைச்சர் பேசினார்.

ஆனால் தமிழ்நாட்டின் முதலமைச்சர் விஜய், மேகதாது அணை பிரச்சினை குறித்து வாய் திறக்கவில்லை. காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டப்பட்டால் தமிழ்நாட்டிற்கு வரும் காவிரி நீர் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாகக் கூறி, தமிழ்நாட்டில் விவசாயிகள், அரசியல் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒப்புக்கு கூட மேகதாது அணை பிரச்சினை குறித்து முதல்வர்கள் மாநாட்டில் விஜய் வாய் திறக்காதது விவசாயிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

எம்.எல்.ஏக்களுக்கு கார் வழங்கப்படும் என அறிவித்து விட்டு, டெஸ்ட் டிரைவ் என பரபரக்கும் விஜய், விவசாயிகள் விவகாரத்தில், வாய் மூடி மவுனியாக இருப்பது ஏன் என விவசாயிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

